ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2128/24 - 2019 ජූනි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.06.20

2128/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம்

*2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான் 2019, யூலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் கீழே அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பின்வரும் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டங்களை இத்தால் ஆக்குகின்றேன்.*

*2019 ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதிய 2117/55 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*2019, யூன் 20.*

**அட்டவணை**

**நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகளுக்காக குறைவருமானம் பெறும் குடும்பங்களை இனங்காண்பதற்கான செயன்முறை**

**தெரிவு செய்வதற்கான பொதுவான அளவுகோல் மற்றும் சுட்டிகள்**

குறைவருமானம் பெறும் குடும்பங்களை இனங்காண்பதற்கான செயன்முறையானது ஆறு அளவுகோல்களையும் ஒவ்வொரு அளவுகோலும் குறித்த சுட்டிகளைப் பயன்படுத்தி அளவீடு செய்கின்ற அளவுகளையும் கொண்டுள்ளன (பகுதி I). ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆகக்கூடியது 100 சதவீத புள்ளிகளைப் பெறுவதுடன் ஒவ்வொரு சுட்டியின் அளவீடும் தொகைமதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட குடும்ப வருமான மற்றும் செலவின ஆய்வினை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(Household Income and Expenditure Survey – HIES) அடிப்படையாகக் கொண்ட குறித்த சுட்டி தொடர்பான வறிய குடும்பங்களின் எண்ணிக்கையினைக் கணிப்பீடு செய்கின்றது. சுட்டிகளின் வெட்டுப்புள்ளி கணிப்பீட்டு முறைமையானது பகுதி II இல் தரப்பட்டுள்ளதுடன் விலகல் புள்ளிகளைக் கணிப்பிடுவதற்கான சூத்திரம் பகுதி III இல் தரப்பட்டுள்ளது. பகுதி IV ஆனது நான்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்குமான கொடுப்பனவுத் திட்டங்களாகும். பகுதி I இல் தரப்பட்டுள்ள அளவுகோல் மற்றும் சுட்டிகளின் பட்டியல் பின்வருமாறு.

பகுதி I

**அளவுகோல்** **சுட்டிகள்**

**1. கல்வி**

i. குடும்ப உறுப்பினர்களின் கல்வி மட்டம்
ii. 5-16 வயதுகளுக்கிடைப்பட்ட பாடசாலை செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை

**2. சுகாதாரம்**

i. நீண்டகால நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப உறுப்பினர்கள்
ii. அங்கவீனமுற்ற குடும்ப உறுப்பினர்கள்

**3. பொருளாதார மட்டம்**

i. மாதாந்த தலைக்குரிய செலவினம்
ii. மாதாந்த தலைக்குரிய வருமானம்
iii. மாதமொன்றுக்கு 60 அலகுகளைவிடக் குறைவான மின்சாரப் பாவனை

**4. சொத்து**

i. குடும்ப உறுப்பினருக்கு வாழுகின்ற வீடு மற்றும் காணி உரிமை இல்லாதிருத்தல்
ii. குடும்ப உறுப்பினருக்கு ஏனைய வீட்டு உரிமை அல்லது கட்டிடமொன்று இல்லாதிருத்தல்
iii. குடும்பத்திற்கு ஆகக்குறைந்தது 0.5 ஏக்கர் பயிர்ச்செய்கை மேட்டுநிலம் காணப்படாமை
iv. குடும்பத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு ஏக்கர் நெற்செய்கை நிலம் காணப்படாமை
v. ஆகக்குறைந்தது ஒரு மோட்டார் சைக்கிள் CC 125≥, முச்சக்கர வண்டி, கார், வான், ஜீப், பஸ், லொறி, ரிப்பர், கை ட்ரக்டர் (2 சில்லு), ட்ரக்டர் (4 சில்லு), என்பவற்றில் ஒன்றையேனும் கொண்டிராதிருத்தல்.
vi. பொருளாதாரம் தொடர்பான ஆகக்குறைந்தது ஒரு ஆதனத்தினையாவது கொண்டிராதிருத்தல் (மீன்பிடிப் படகு, இணைந்த அறுவடை இயந்திரம், சூடடித்தல் இயந்திரம்)
vii. வாழ்வாதாரத்திற்கான ஆகக்குறைந்தது ஒரு ஆதனத்தினைக் கொண்டிராதிருத்தல் (கறவைப் பசு 05, ஆடுகள் 20, கோழி 50, வாத்து 50, தாரா 10)

**5. வீடமைப்பு நிர்மாணம்**

i. லைன் அறை/ வரிசை வீடு/ சேரி/ குடிசை அல்லது ஏனையவற்றில் வாழ்தல்
ii. நிரந்தர சுவர், நிரந்தர தரை, நிரந்தர கூரையினைக் கொண்ட வாழ்விடம் ஒன்றினைக் கொண்டிராதிருத்தல்
iii. 500 சதுர அடிக்கு குறைவான மொத்த தரைப் பிரதேசம்
iv. சுத்தமான குடிநீர் வசதி காணப்படாமை
v. போதிய துப்பரவேற்பாட்டு வசதி காணப்படாமை
vi. மின்சார இணைப்பு காணப்படாமை

**6. குடும்ப மக்கள் தொகை**

i. தங்கிவாழும் விகிதம் (0-14 வயது வரையான மக்களின் எண்ணிக்கை, 65 வயது மற்றும் அதற்கு மேல், 15-64 வயது வரை) 0.64 சதவீதத்திற்கு அதிகமாகக் காணப்படுதல்
ii. ஒற்றைப் பெற்றோர் குடும்பம்

பகுதி II

**கணிப்பீட்டு முறைமை**

சுட்டிகள் மற்றும் சுட்டி வெட்டுப்புள்ளி

***1. கல்வி***

I. குடும்ப உறுப்பினர்களின் உயர்கல்வி மட்டம்

க.பொ.த சாதாரண தர அல்லது உயர்கல்வி சித்தி → வறுமை இல்லை (0)
க.பொ.த சாதாரண தரத்திற்கு கீழ் நிலை → வறுமை (1)

அதிகூடிய கல்வி மட்டம் க.பொ.த சாதாரண தர சித்தியாக இருப்பின் அல்லது அதற்கு உயர் மட்டமாக இருப்பின் "வறுமையற்றதாக" கருதப்படுவதுடன் உயர்கல்வி மட்டம் 10 ஆம் வகுப்பு சித்தி அல்லது அதனைவிட குறைவான மட்டங்கள், விசேட கல்வி, பாடசாலைக்கு ஒரு போதும் செல்லாமை என்பன "வறுமை" எனக் கருதப்படும்.

II. பாடசாலை செல்லும் வயதிலுள்ள (5-16 வயது) குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தற்பொழுது பாடசாலைக்கு செல்பவர்களும்

உறுப்பினர் (5-16 வருடங்கள்) தற்பொழுது பாடசாலைக்குச் சமூகமளிப்பதுடன் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் செல்கின்றனர் --->வறுமை இல்லை (0)

உறுப்பினர் (5-16 வருடங்கள்) தற்பொழுது பாடசாலைக்கோ அல்லது வேறு கல்வி நிறுவனங்களுக்கோ செல்வதில்லை --->வறுமை (1)

பாடசாலை செல்லும் வயதில் (5-16 வருடங்கள்) குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாடசாலைக்கு செல்வார்களாயின் வறுமை இல்லை எனக் கருதப்படுவதுடன் பாடசாலை செல்லும் வயதில் (5-16 வருடங்கள்) பாடசாலை செல்லவில்லையாயின் வறுமையாகக் கருதப்படும்.

***2. சுகாதாரம்***

1. நீண்டகால (கடுமையான) நோயிற்கு குடும்ப உறுப்பினர் ஒருவர் ஆளாகியிருத்தல்

நீண்டகால (கடுமையான) நோய் - இல்லை ----->வறுமை இல்லை(0)
நீண்டகால (கடுமையான) நோய் - ஆம் ----->வறுமை (1)

மாரடைப்பு, பக்கவாதம், நீரிழிவு நோய், புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக நோய், மனநோய் அல்லது வேறேதேனும் நீண்டகால (கடுமையான) நோயினால் குடும்பத்தில் ஒருவரும் பாதிக்கப்படாதபோது வறுமையாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன் மேற்குறித்த நோயினால் குடும்பத்தில் ஒருவரேனும் பாதிக்கப்படுவாராயின் அது வறுமையாகக் கருதப்படும்.

2. அங்கவீனமுடைய குடும்ப உறுப்பினர்

அங்கவீனம் - இல்லை-->வறுமை இல்லை (0)
அங்கவீனம் - ஆம்-->வறுமை (1)

குடும்ப உறுப்பினர் அங்கவீனரல்லாத போது அவர்கள் வறியவர்களாகக் கருதப்படமாட்டாது என்பதுடன் குடும்ப அங்கத்தவர்களுக்கு அங்கவீனம் காணப்படும்போது வறுமையாகக் கருதப்படும்.

***3. பொருளாதார மட்டம்***

i. தலைக்குரிய செலவினம்

மாதாந்த தலைக்குரிய செலவினம் ≥ ரூ.5, 500 ------->வறுமை இல்லை (0)
மாதாந்த தலைக்குரிய செலவினம் < ரூ.5,500 ------->வறுமை (1)

மாதாந்த தலைக்குரிய செலவினம் ரூபா 5,500 அல்லது அதனைவிட அதிகமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. தலைக்குரிய மாதாந்த செலவினம் ரூபா 5,500 இற்குக் குறைவாகக் காணப்படுமாயின் வறுமை எனச் சுட்டிக்காட்டப்படும்.

ii. மாதாந்த தலைக்குரிய வருமானம்

மாதாந்த தலைக்குரிய வருமானம் ≥ ரூ. 6,000 -------→வறுமை இல்லை (0)
மாதாந்த தலைக்குரிய வருமானம் < ரூ. 6,000 -------→வறுமை (1)

மாதாந்த தலைக்குரிய வருமானம் ரூபா 6,000 அல்லது அதற்கு அதிகமாயின் அது வறுமையாகக் கருதப்பட மாட்டாது என்பதுடன் மாதாந்த தலைக்குரிய வருமானம் ரூபா 6,000 இனைவிடக் குறைவாகக் காணப்படுமாயின் அது வறுமையாகக் கருதப்படுகின்றது.

iii. மின்சார நுகர்வு

சராசரி மாதாந்த மின்சார நுகர்வு ≥ 60 kWh -------→வறுமை இல்லை (0)
சராசரி மாதாந்த மின்சார நுகர்வு< 60 kWh -------→வறுமை (1)

சராசரி மின்சார நுகர்வு 60kWh அல்லது அதற்கு அதிகமாயின் வறுமையெனக் கருதப்படமாட்டாது. சராசரி மின்சார நுகர்வு 60kWh இற்கு குறைவாயின் வறுமை எனக் கருதப்படும்.

**4. ஆதனம்**

i. வதியும் வீட்டுடன் காணிக்கான குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்களின் உரித்து.

உரிமையானது ------→வறுமை இல்லை(0)
உரிமையற்றது ------→வறுமை (1)

வதியும் வீட்டுடன் காணி உரிமை குடும்ப உறுப்பினருக்கு/ உறுப்பினர்களுக்கு காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. உரிமையில்லாத போது வறுமையாகக் கருதப்படும்.

ii. ஏனைய வீடுகள்/கட்டிடங்கள் குடும்ப உறுப்பினருக்கு/உறுப்பினர்களுக்கு உரித்துடையதாக இருத்தல்.

உரிமையானது ------→வறுமை இல்லை(0)
உரிமையற்றது ------→ வறுமை (1)

குடும்ப உறுப்பினருக்கு /உறுப்பினர்களுக்கு ஏனைய வீடுகள்/கட்டிடங்கள் உரித்துடையதாக இருப்பின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. ஏனைய வீடுகள்/கட்டிடங்கள் உரித்துடையதாக இல்லாதபோது வறுமையாகக் கருதப்படும்.

iii. குடும்ப உறுப்பினர்/உறுப்பினர்களின் மேட்டுநில சொந்தம் 0.5 ஏக்கருக்கு சமனாக அல்லது அதனைவிட அதிகமாக காணப்படுதல்.

உரிமையானது (0.5 ஏக்கர் அல்லது அதனை விஞ்சியது)------→வறுமை இல்லை(0)
உரிமையானது (0.5 ஏக்கரைவிட குறைவானது)-----→ வறுமை (1)

குடும்பமொன்றிற்கு சொந்தமான அனைத்து மேட்டு நிலங்களினதும் பரப்பு ½ ஏக்கர் அல்லது அதனை விஞ்சுமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. ஏதேனும் மேட்டுநிலத்தை கொண்டிராதபோது அனைத்து மேட்டு நிலங்களும் ½ ஏக்கரைவிட குறைவாகக் காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படும்.

iv. குடும்ப உறுப்பினர்/குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான நெற் காணி 1 ஏக்கருக்கு அல்லது அதனைவிட அதிகமாகக் காணப்படல்.

உரிமையானது ≥ ஒரு ஏக்கர் ------→வறுமை இல்லை(0)
உரிமையானது < ஒரு ஏக்கர்-----→ வறுமை (1)

குடும்ப உறுப்பினர்/குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான நெற் காணி 1 ஏக்கருக்கு அல்லது அதனைவிட அதிகமாகக் காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படமாட்டாது. 1 ஏக்கரைவிடக் குறைவாக நெற்காணி காணப்படுமாயின் வறுமையாகக் கருதப்படும்.

V. ஆகக்குறைந்தது மோட்டார் சைக்கிள் ≥CC 125 முச்சக்கர வண்டி, கார், வான்/ ஜீப், பஸ், லொறி/ரிப்பர், இரண்டு சக்கர ட்ரக்டர், ட்ரக்டர் (4 சில்லு), போன்ற வாகனங்களில் ஏதாவது ஒன்றையேனும் கொண்டிருத்தல்.

உரிமையானது-----→வறுமை இல்லை(0)
உரிமையற்றது ------→வறுமை (1)

Vi. தொழிநுட்ப / தொழிநுட்பமல்லாத மீன்பிடிப் படகுகள், இணைந்த அறுவடை இயந்திரம், நெல் அறுவடை /கிளை நறுக்கும் இயந்திரம் என்பவற்றில் ஏதாவது ஒன்றையேனும் கொண்டிருத்தல்.

உரிமையானது------→வறுமை இல்லை(0)
உரிமையற்றது ------→வறுமை (1)

Vii. பால் கறவைப் பசு 5, ஆடுகள் 20, கோழி 50, வாத்து 50, தாரா 10 அல்லது அதிக எண்ணிக்கையிலான சிறிய கால்நடைகள் போன்ற வாழ்வாதாரத்திற்கான கால்நடைகளில் ஆகக்குறைந்தது ஒன்றினைக் கொண்டிருத்தல்.

உரிமையானது------→வறுமை இல்லை(0)
உரிமையற்றது ------→வறுமை (1)

**5. வீடமைப்பு நிர்மாணம்**

i. வீட்டு அலகின் தன்மை

வீட்டலகின் தன்மை *= ------→வறுமை இல்லை(0)
வீட்டலகின் தன்மை **= ------→வறுமை (1)

* வீட்டின் தன்மை தனி வீடாக இருத்தல் (ஒரு மாடி) தனி வீடுகள் (2 மாடி), தனி வீடு (2 மாடிகளுக்கு அதிகமானது), இணைந்த வீடுகள்/தொடர் மாடிகள், ஆடம்பர வீடுகள், இரட்டை வீடுகள் என்பன வறுமையற்றதாக கருதப்படும்.

** வீட்டின் தன்மை லைன் வீடுகள்/லைன் அறைகள், சேரிகள், குடிசைகள் அல்லது ஏனைய வகையான வீடுகளாக இருப்பின் வறுமையானதாகக் கருதப்படும்.

ii. வீடு கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருள்கள்

அ. சுவர் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருள்

சுவர்கள் * -நிரந்தர மூலப்பொருள் -----→வறுமை இல்லை(0)
சுவர்கள் **-பகுதியளவு நிரந்தர மூலப்பொருள் -----→வறுமை (1)

* செங்கல், களிமண், சீமேந்து, பாறைக்கல், களிகல் பயன்படுத்தி சுவர் அமைக்கப்பட்டது.

** களிமண், பலகை/தகரம்,தென்னை மற்றும்/பனை ஓலைகள் மற்றும் ஏனைய இவை போன்ற மூலப்பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப்பொருளாக கருதப்படும்.

ஆ. தரைக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருட்கள்

தரை - நிரந்தர மூலப்பொருட்கள்* ------→வறுமை இல்லை(0)
தரை- பகுதியளவு நிரந்தர மூலப்பொருள்** ------→வறுமை (1)

* தரைக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது சீமேந்து, ரெராசோ/ போர்சலின் ஓடுகள், கொங்கிறீட் ஆயின் அவை நிரந்தர மூலப்பொருட்களாகும்.

** களி, பலகை, மணல் மற்றும் அவை போன்ற ஏனைய பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப்பொருட்களாகக் கருதப்படும்.

இ. கூரைக்குப் பயன்படுத்தப்பட்ட பிரதான மூலப்பொருட்கள்

கூரை – நிரந்தர மூலப்பொருட்கள்* -----→வறுமை இல்லை (0)
கூரை- பகுதியளவு நிரந்தர மூலப்பொருள்** -----→ வறுமை (1)

* கூரை ஓடுகள், அஸ்பெஸ்ரஸ், கொங்றீட், அலுமினியம் கலந்த தகடுகள் கூரைக்குப் பயன்படுத்தப்படுமாயின் அவை நிரந்தர மூலப்பொருட்களாகும்.

** தகரம், தென்னை /பனை ஓலைகள்/வைக்கோல் அல்லது அவை போன்ற ஏனைய மூலப்பொருட்கள் பகுதியளவு நிரந்தர மூலப்பொருளாகக் கருதப்படும்.

சுவர், தரை மற்றும் கூரை என்பவற்றின் மூலப்பொருட்கள் நிரந்தர மூலப்பொருட்களால் ஆக்கப்பட்டிருப்பின் அவை வறுமையற்றது எனக் கருதப்படுவதுடன் மேற்படி தேவைக்காக பயன்படுத்தப்பட்டவை பகுதியளவானதாகக் காணப்படுமாயின் அவை வறுமையானது எனக் கருதப்படும்.

iii. தரைப் பரப்பு

தரைப் பரப்பு 500 சதுர அடி அல்லது அதற்கு அதிகமாயின்*--------→ வறுமை இல்லை(0)
தரைப் பரப்பு 500 சதுர அடிக்கு குறைவாயின்**------→வறுமை (1)

* தரைப் பரப்பு 500 சதுர அடி அல்லது 500 சதுர அடிக்கு அதிகமாயின் வறுமை அற்றதாக கருதப்படும்.

** தரைப் பரப்பு 500 சதுர அடிக்கு குறைவாயின் வறுமையாகக் கருதப்படும்.

iv. குடிநீர் பெறும் பிரதான மூலம்

குடிநீரின் பிரதான மூலம் – பாதுகாப்பானது* -----→ வறுமை இல்லை (0)
குடிநீரின் பிரதான மூலம் – பாதுகாப்பற்றது** ----→ வறுமை (1)

* குடிநீரின் பிரதான மூலம் முற்றத்தில் பாதுகாப்பட்ட கிணறு ஆயின் (குழாய் இணைப்பு/குழாய் இணைப்பற்ற), முற்றத்திற்கு வெளியே பாதுகாக்கப்பட்டிருத்தல், வீட்டில் குழாய் இணைப்பு, வீட்டுக்கு வெளியே முற்றத்தில் நீர் இணைப்புகள், கிராமிய பிரதேசங்களில் நீர்க் கருத்திட்டங்கள், குழாய்க் கிணறு, பௌசர் விநியோகம், போத்தல் நீர் என்பன வறுமையற்றதாகக் கருதப்படும்.

** குடிநீரின் பிரதான மூலம் பாதுகாப்பற்ற கிணறு, குளங்கள்/ஆறுகள்/ஊற்றுகள்/மழை நீர், அல்லது ஏனைய இது போன்ற பாதுகாப்பற்ற நீர் மூலங்கள் வறுமையானதாகக் கருதப்படும்.

v. மலசலகூட வசதிகள்

மலசலகூட வசதிகள்* ------→வறுமை இல்லை(0)
மலசலகூட வசதிகள்**------→வறுமை (1)

* மலசலகூட வசதி குடும்பத்தின் தனிப்பட்ட பாவனைக்காக வீட்டினுள் அல்லது வீட்டின் வெளியே, பலரின் பாவணைக்காக வீட்டினுள் அல்லது வீட்டின் வெளியே, மலசல கூடத்தின் தன்மை நீர் வெளியேறாதவாறு அடைக்கப்பட்டு குழியுடன் இணைக்கப்பட்டிருத்தல் அல்லது நீர் அடைக்கப்பட்ட கழிவு நீரகற்றல் குழாய் என்பன வறுமையற்றதாகக் கருதப்படும்.

** மலசல கூடத்தின் தன்மை நீர் அடைக்கப்படாமல் நேரடி குழியாகக் காணப்படுதல், மற்றும் மலசல கூடம் காணப்படாமல் ஏனைய குடும்பங்களுடன் பகிரப்படுதல், பொது மலசல கூடங்களின் பயன்பாடு என்பன வறுமையாகக் கருதப்படும்.

vi. ஒளியூட்டலின் பிரதான மூலம்

ஒளியூட்டல்*------→ வறுமை இல்லை(0)
ஒளியூட்டல்**------→வறுமை (1)

* ஒளியூட்டலின் பிரதான மூலம் மின்சாரம், சூரிய சக்தி, மின்பிறப்பாக்கி / பற்றரி, உயிரியல் வாயு என்பன வறுமையற்றதாகக் கருதப்படும்.

** ஒளியூட்டலுக்கான பிரதான மூலம் மண்ணெண்ணெய் அல்லது அதையொத்த ஏனைய மூலங்களாயின் வறுமையாகக் கருதப்படும்.

**6. குடும்ப மக்கள் தொகை**

i. தங்கிவாழும் விகிதம்
தங்கிவாழும் விகிதம் (0-14 வயது வரையான மக்களின் எண்ணிக்கை, 65 வயது மற்றும் அதற்கு மேல்,

15-64 வயது வரை) 0.64 இற்கு குறைவானது அல்லது சமனானது------→ வறுமை இல்லை(0)
தங்கிவாழும் விகிதம் 0.64 இற்கு அதிகமானது ------→ வறுமை (1)

குடும்பத்தின் தங்கிவாழும் விகிதம் 0.64 இற்கு அதிகமாகக் காணப்படுமாயின் வறுமை எனக் கருதப்படுவதுடன் இல்லாதபோது வறுமையற்றதாகக் கருதப்படும்.

ii. ஒற்றை பெற்றோர் குடும்பம்

திருமண நிலை – இரண்டு பெற்றோரும் உயிர்வாழ்தல் ------→வறுமை இல்லை(0)
திருமண நிலை– பெற்றோரில் ஒருவர் உயிர்வாழ்தல்------→வறுமை (1)

ஒற்றை பெற்றோர் குடும்பம் வறுமையானதாகக் கருதப்படும்.

பகுதி III

**வாழ்வாதார புள்ளிக்கணிப்பீட்டுக்கான சூத்திரம்:**

தனிப்பட்ட ஒருவருக்கான வாழ்வாதார புள்ளிக்கணிப்பீடானது மூன்று கட்டங்களில் இடம்பெற்றுள்ளது;

1. வாழ்வாதார சுட்டியினை கணிப்பீடு செய்தல்
2. சுட்டிகளுக்கான நிறையினை கணிப்பீடு செய்தல்
3. தனிப்பட்ட ஒருவருக்கான நிறையிடப்பட்ட வாழ்வாதாரப் புள்ளி கணிப்பீடு

**வாழ்வாதார சுட்டியினை கணிப்பீடு செய்தல்**

தனிப்பட்டவரான i சுட்டி j யினை கொண்டிருப்பாராயின், அவரது வாழ்வாதார சுட்டி பின்வரும் சமன்பாட்டினைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட முடியும்;

$x_j(i)$ என்பது j சுட்டியின் மீதான தனிப்பட்ட பெறுமதியாகும்.
ஆயின்,

$\mu_j(i) = 1$ ; தனிப்பட்டவர் சுட்டி $j$ இல் அகற்றப்பட்டிருப்பின்

$\mu_j(i) = 0$ ; தனிப்பட்டவர் சுட்டி $j$ இல் அகற்றப்படாதிருப்பின்

**நிறை தொழிற்பாட்டுக்கான சூத்திரம்**

நிறைகள் அதிர்வெண்ணினை அடிப்படையாகக் கொண்ட நிறை தொழிற்பாட்டினை பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கொரு முறை தொகைமதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்படும் குடும்ப வருமான மற்றும் செலவின ஆய்வினைப் பயன்படுத்தி மாவட்ட அடிப்படையில் சுட்டிகள் பல்வேறு அகற்றல்களின் தொடர்பு முக்கியத்துவத்தினைக் கவனத்திற் கொண்டு அளவீடு செய்யப்படுகின்றது. கிடைப்பனவிலுள்ள தரவுகளின் அடிப்படையில் புதிய குடும்ப வருமான மற்றும் செலவின ஆய்வினை மீளாய்வு செய்தல் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான குறிப்பிட்ட காலத்திற்குமாக நிறையானது இக்கணிப்பீட்டிற்காக பொறுத்தப்படும்.

$$\omega_j = \frac{ln\frac{1}{f_j}}{\sum_{j=1}^{k} ln\frac{1}{f_j}} \times 100 \; ; \; j = 1,2, \dots\dots\dots\dots\dots\dots\dots\dots \dots k$$

ஆயின்; $f_j$ என்பது $j$ சுட்டி மீதான அகற்றப்பட்ட மக்களின் விகிதாசாரத்தினை குறிப்பதுடன் $k$ என்பது சுட்டிகளின் எண்ணிக்கையாகும். (i = 1,2, ............ 25 மாவட்டங்கள்)

குறைந்த நிறைகள் என்பது அதிகமானவர்கள் குறைந்த அகற்றப்பட்டவர்கள் என்பதுடன் குறைந்த நிறைகள் குறைந்த முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது. உயர் நிறைகள் என்பது உயர் அதிர்வெண்ணான "குறைக்கப்பட்ட மக்கள்" என்பதனை உருவாக்குவதுடன் உருவாக்கத்தில் அதிகளவு அகற்றுதலினைக் கொண்டுள்ளது. உயர் நிறைகள் அதிக முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளன.

**தனிப்பட்டவர்களுக்கான நிறையிடப்பட்ட அகற்றல் புள்ளியினைக் கணிப்பீடு செய்தல்**

$$\mu_i = \frac{\sum_j^k w_{j\times}\mu_i(i)}{\sum_j^k w_j}$$

ஆயின்; $\mu_i$ என்பது தனிப்பட்டவர்களுக்கான நிறையிடப்பட்ட அகற்றலாகும். நிறையிடப்பட்ட அகற்றல் புள்ளி 0 மற்றும் 1 ஆகிய பெறுமதிகளுக்கிடையில் பூச்சியம் (0) என்பது குறைந்த அகற்றப்படுதலும் ஒன்றினை (1) நோக்கிய நகர்வு அதிகூடிய அகற்றுதலாகும்.

**அனுமான தரவுகளைப்பயன்படுத்தி உதாரணங்கள்**

| சுட்டிகள் | குடும்பம் | | | | | | | | இறுதி நிறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | எண் (f) | 1/f | உள்ளே (1/f) | நிறை | |
| 1. கல்வி | | | | | | | | | |
| (i) ஆகக் குறைந்தது சாதாரண தர கல்வி மட்டத்தை நிறைவு செய்த குடும்ப உறுப்பினர்கள் எண். | 0 | 1 | 1 | 1 | 3 | 1/3 | -1.10 | 0.062548 | 6.25 |
| (ii) பாடசாலையில் அனுமதிக்கப் படாத ஆகக் குறைந்தது (5-16) வயதுடைய ஒரு சிறுவர். | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| 2. சுகாதாரம் | | | | | | | | | |
| (i) நோய் | 0 | 1 | 1 | 0 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (ii) குடும்ப உறுப்பினர் ஒருவர் அங்கவீன முற்றிருத்தல் | 0 | 1 | 1 | 1 | 3 | 1/3 | -0.10 | 0.062548 | 6.25 |
| 3. பொருளாதார மட்டம் | | | | | | | | | |
| (i) ரூபா 5,500 விற்குக் குறைந்த மாதாந்த தலைக்குரிய செலவினம். | 0 | 1 | 1 | 0 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (ii) ரூபா 6,000 விற்குக் குறைந்த மாதாந்த தலைக்குரிய வருமானம். | 0 | 1 | 1 | 1 | 3 | 1/3 | -0.10 | 0.062548 | 6.25 |
| (iii) மாதாந்தம் 90 அலகுகளை விட குறைந்த மின்சார நுகர்வு | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| 4. ஆதனங்கள் | | | | | | | | | |
| (i) குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வீடு மற்றும் காணி உரிமையாக இல்லாதிருத்தல். | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (ii) குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஏனைய வீடு அல்லது கட்டிட மொன்று உரிமையாக இல்லா திருத்தல். | 0 | 1 | 1 | 0 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (iii) குடும்பமொன்றுக்கு ஆகக்குறைந் தது 0.5 ஏக்கர் மேட்டு நிலம் இல்லா திருத்தல். | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (iv) குடும்பமொன்றுக்கு ஆகக்குறைந் தது ஒரு ஏக்கர் நெற் காணி இல்லா திருத்தல். | 1 | 1 | 0 | 0 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (v) ஆகக் குறைந்தது போக்குவரத்து வாகனங்களில் (மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, கார், வேன், ஜீப், பஸ், லொறி, ரிப்பர், கை ரக்டர் (2 சக்கரங்கள்), ரக்டர் (4 சக்கரங்கள்) ஆகிய) ஒன்றாவது இல்லாதிருத்தல். | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (vi) ஆகக் குறைந்தது பொருளாதார செயற்பாட்டு ஆதனம் (மீன்பிடிப் படகு, இணைந்த அறுவடை இயந் திரங்கள், கதிரடிக்கும் இயந்திரம்) ஒன்றாவது இல்லாதிருத்தல். | 1 | 1 | 1 | 0 | 3 | 1/3 | -1.10 | 0.062548 | 6.25 |
| (vii) வாழ்வாதாரம் தொடர்பான ஆதனம் (5 பசு, 20 ஆடுகள், கோழி 50, வாத்து 50, தாரா 10) ஒன்றாவது இல்லாதிருத்தல். | 1 | 1 | 1 | 1 | 4 | 1/4 | -0.69 | 0.078927 | 7.89 |

| சுட்டிகள் | குடும்பம் | | | | | | | | இறுதி நிறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | எண் (f) | 1/f | உள்ளே (1/f) | நிறை | |
| 5. வீடமைப்பு | | | | | | | | | |
| (i) லைன் அறை/நிரல் வீடு, சேரி/ குடிசை அல்லது பிற வீடுகளில் வாழ்தல். | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (ii) நிரந்தர சுவர், நிரந்தர தரை, நிரந்தர கூரையினைக் கொண்ட வீடொன்றில் வாழாதிருத்தல். | 0 | 1 | 0 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (iii) 500 சதுர அடிக்குக் குறைந்த மொத்த தரை பரப்பு. | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (iv) பாதுகாப்பான தூய குடிநீர் கிடைக்காமை. | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (v) போதிய துப்பரவேற்பாட்டு வசதி கிடைக்காமை. | 0 | 1 | 1 | 0 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (vi) மின்சார இணைப்பு கிடைக்காமை | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| 6. குடும்ப மக்கள் தொகை | | | | | | | | | |
| (i) தங்கி வாழும் விகிதம் (0.64 இணைவிட அதிகம்) | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| (ii) ஒற்றை பெற்றோர் குடும்பம் | 0 | 0 | 1 | 1 | 2 | 1/2 | -0.69 | 0.039464 | 3.95 |
| | 18.09 | 56.59 | 92.11 | 74.01 | 50 | | -17.56 | | |

குடும்பம் 1 இற்கான நிறையிடப்பட்ட தேய்வுப் புள்ளி:
(1* 3.95) + (1*6.25) + (1*7.89) = 18.08

**தெரிவு வெட்டுப் புள்ளியினை மதிப்பிடுதல்**

தெரிவு வெட்டுப் புள்ளியானது தேசியரீதியில் தேய்வு மாதிரியுடன் உடன்பட்ட விதத்தில் கிடைப்பனவிலுள்ள நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத்திட்டத்திற்கு பகிர்ந்தளிப்பதற்கு மாவட்ட மட்டத்தில் இடம்பெறும். தெரிவு வெட்டுப் புள்ளியானது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக தயாரிக்கப்படும்.

வழங்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்ட ஒதுக்கீடு Q, ஆகவும் i ஆவது மாவட்ட ஒதுக்கீடு $(q_i)$ பின்வருமாறு அமையும்;

$$(x) = \frac{\text{நாட்டிலுள்ள சமுர்த்தி பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை}}{\text{நாட்டிலுள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை}}$$

$(q_i)$=மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையின் கீழ் $x^{th}$ மாவட்டத்தில் ஒவ்வொரு செலவினத்தினதும் தேசிய மத்தி

ஆயின்

$$Q = \sum_{i=1}^{25} q_i$$

எங்கு;

i = 1, 2, 3 ……………………………………….. 25 (மாவட்டங்கள்)

பகுதி IV

**1. சமுர்த்தி பயன்பெறுநர்களுக்கான நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்டம் :**

**தகுதி:**

*நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நலன்புரி நன்மைகள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்டவாறு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான வெட்டுப்புள்ளியின் அளவு 0 முதல் 100 வரை புள்ளியினைப் பெறுகின்றவர்களுக்கு பின்வரும் நன்மைகள் வழங்கப்படும்.*

(அ) குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை 4 அல்லது அதற்கு மேல்= மாதத்திற்கு ரூபா 3,500/-

(ஆ) குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை 3 மற்றும் 4 = மாதத்திற்கு ரூபா 2,500/-

(இ) குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை 3 இற்கு குறைய = மாதத்திற்கு ரூபா 1,500/-

**குறிப்பு:** கொடுப்பனவானது முதலில் குடும்பத்தின் பெண் தலைமைக்கு வழங்கப்படுவதுடன் பெண் தலைமை இல்லாதபோது கொடுப்பனவு ஆண் தலைமைக்கு வழங்கப்படும்.

**2. 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்டம் :**

**தகுதி:**

(அ) நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நலன்புரி நன்மைகள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கான வெட்டுப் புள்ளி அளவான 0 முதல் 100 இற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுபவர்கள்.

(ஆ) 70 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

(இ) குடும்பமொன்றின் வாழ்க்கைத்துணை ஒருவர் மாத்திரம் மாதாந்தம் ரூபா 2,000/- இனைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெறுவார்.

(ஈ) ஏனைய திட்டங்களிலிருந்து நலன்புரி நன்மைகளைப் பெறுகின்றவர்களும் நன்மையினைப் பெறுவதற்கு தகுதி பெறுவர்.

**3. அங்கவீனமுற்றவர்களுக்கான நலன்புரி நன்மை நிகழ்ச்சித்திட்டம் :**

**தகுதி:**

(அ) நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நலன்புரி நன்மைகள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கான வெட்டுப் புள்ளி அளவான 0 முதல் 100 இற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுபவர்கள்.

(ஆ) ஆள் ஒருவரின் அங்கவீனம் உடலில் வெளிப்படையாக தென்படக்கூடியதாக இருத்தல் அல்லது மருத்துவர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல்.

(இ) அங்கவீனத்தின் காரணமாக அவர் தனியாக செயற்பட முடியாதவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) விபத்து அல்லது முதுமை காரணமாக தற்காலிக அங்கவீனத்திற்குட்பட்ட ஆளெவரும் இத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதி பெறமாட்டார்.

(உ) ஏனைய திட்டங்களிலிருந்து நலன்புரி நன்மைகளைப் பெறுகின்றவர்களும் நன்மையினைப் பெறுவதற்கு தகுதி பெறுவர்.

(ஊ) முழுமையான அங்கவீனமுற்றவர்களுக்கு மாதாந்தம் ரூபா 3,000/- வழங்கப்படும்.

**4. தீர்மானிக்கப்படாத சிறுநீரக நோய் (CKDu) உடையவர்களுக்கான நலன்புரி நன்மைக் கொடுப்பனவுத் திட்டம்**

**தகுதி:**

(அ) நிதி அமைச்சுடன் கலந்துரையாடி நலன்புரி நன்மைகள் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான குறைவருமானம் பெறும் குடும்பங்களுக்கான வெட்டுப் புள்ளி அளவான 0 முதல் 100 இற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுபவர்கள்.

(ஆ) விசேட அரசாங்க மருத்துவரினால் சான்றுப்படுத்தப்பட்ட சிறுநீரக நோயாளி.

(இ) சிறுநீரக நோயாளிக்கு மாதம் ரூபா 5,000/- செலுத்தப்படும்.

(ஈ) ஏனைய திட்டங்களிலிருந்து நலன்புரி நன்மைகளைப் பெறுகின்றவர்களும் நன்மையினைப் பெறுவதற்கு தகுதி பெறுவர்.

07-80

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.